தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 25, பிரஜோற்பத்தி—திருவள்ளுவராண்டு 2022.

1991 செப்டம்பர் 10, செவ்வாய்க் கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.''

பின் விளைவையும், ஊதியத்தையும் கருதி இப்போதுள்ள முதலை இழந்துவிடக் காரணமான செயலை அறிவுடையவர் மேற்கொள்ளமாட்டார்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 9. டாக்டர். ச. சுந்தரராஜ், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

பரமக்குடியில் சார்நிலை நீதிமன்றம்.

9—

*1646 டாக்டர் ச. சுந்தரராஜ்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பரமக்குடியில் சார்நிலை நீதிமன்றம் (Sub-Co r) நிறுவுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்துடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது இப்பிரச்சினை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1991 செப்டம்பர் 10

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபை கூடியவுடன் ஆம் என்ற வார்த்தை வருமோ இல்லையோ என்று நான் பலவாறு கலங்கிக் கொண்டு இருந்தேன். ஆனால் இந்தச் சபை கூடியவுடன் அறிவுடையவர்கள் செய்கின்ற காரியத்திற்கு நல்ல ஊக்கமா இருக்கிறது என்ற வகையில் ஆம் என்று அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். பரமக்குடி என்பது இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்தியில் அமைந்துள்ள பகுதியாகும். கமுதி, முதுகுளத்தூர் போன்ற தாலுக்காக்களிலே இருந்தும், இராமநாத புரம், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளிலே இருந்தும் பரமக் குடிக்குத்தான் வரவேண்டும். மேலும் 40-க்கு மேற்பட்ட வழக் கறிஞர்கள் வந்து வழக்கறிஞர் தொழில் செய்கிறார்கள். எப் போதுமே இரட்டை இலைக்குத்தான் அந்த மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள். புயல் வீசியபோதுகூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய சின்னமான சேவல் சின்னத்தைக்கூட மறக்காத மக்களுக்காகக் கட்டாயம் பரமக்குடியில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் பரமக்குடியில் சப் கோர்ட் அமைத்துத் தர ஆதரவு அளிககப்படுமா? மற்றும் ஒன்று. 1971 ஆம் ஆண்டு ஜஸ்டிஸ் நடேசன் அவர்கள் அங்கே வருகை தந்து கட்டாயம் பரமக்குடி யில் அமைக்கப்படும் என்று உறுதி தந்திருக்கிறார்கள். மேலும் 1980 ஆம் ஆண்டு மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வருகை தந்தபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் சங்கத் தலைவர் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் அமைககப்படுமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கொள்கை அளவில் நம் முடைய பரமக்குடியில் சப் கோர்ட் அமைக்க முடிவெடுத்து அது இன்றைக்கு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அதனுடைய

1991 செப்டம்பர் 10]

ஒப்புதலுக்காகக் காத்து இருக்கிறது. அதற்கு முன்பாக அந்த மாவட்டத்தினுடைய தலைநகரத்திலே மாவட்ட நீதிமன்றம் பற்றி வருகிற 25 ஆம் தேதி அன்றையதினம் சட்டத் துறை விவாதத்தின்போது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடும், ஆணையின்படியும் எந்தெந்த இடத்திலே, எந்தெந்த தலைநகரங்களிலே மாவட்ட நீதிமன்றங்கள் வர இருக்கின்றன என்ற ஆணையை அரசு அறிவிக்க இருக்கிறது. அதனை அமைத்த பிறகு சப் கோர்ட் பரமக்குடியில் நிச்சயமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே ஏற்கனவே இரண்டு நீதிமன்றங்கள் ஒன்று டிஸ்ட்ரிக்ட் முன்சீஃப் கோர்ட் இரண்டாவது டிஸ்ட்ரிக்ட் முன்சீஃப் கம் ஜுடிஷியல்மாஜிஸ்ட்ரேட் கோர்ட். இந்த இரண்டு நீதிமன்றங்கள் பரமக்குடியில் இருக்கின்றன மூன்றாவது வசதியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு சப் கோர்ட் நிச்சயம் பரமக்குடியில் வரும், வரும், வரும், வரும்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்ட கோர்ட்டை இராமநாதபுரத்தில் அமைப்பதற்காக கடந்த ஓராண்டு காலமாக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் செகண்ட் ஃப்ளோர் காலி செய்யப்பட்டு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சப் கோர்ட் பற்றிய கேள்வி. நீங்கள் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்குப் போகிறீர்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : அந்த மாவட்ட கோர்ட் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருவதற்கு மறுக்கிறது. ஒரு வருட காலமாக இடம் காலி செய்யப்பட்டு இரண்டாவது தளம் கலெக்டர் அலுவலகத்தில் காலியாக இருக்கிறது. ஆனால் ஜஸ்டிஸ் அவர்கள் வருவதற்கு பல்வேறு காரணங்களைச் சொல்லிக் கொண்டு, அதன் காரணமாக அந்த மாவட்ட நிர்வாகம் உள்ளே நுழைவதற்கு மறுக்கிறது. ஆகவே இவ்வாறு பல்வேறு நிலைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்வேறு நிலைகளுக்குப் போகக்கூடாது. இதிலே கேள்வி கேளுங்கள்.

டாக்டர் ச. சுந்தரராஜ் : அந்த மாவட்ட நீதிமன்றத்தை உடனே இராமநாதபுரத்தில் அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாக திட்டவட்டமாகச் சொன்னதுபோல, வருகிற 25-ம் நாள்

நீதி நிர்வாகங்கள் மற்றும் சிறைச்சாலை டிமாண்ட் வருகிறது. கோர்ட்டினுடைய டிமாண்ட் வருகிறது. அன்றைக்கு மிகத் தெளிவாக இதுபற்றி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அனுமதியோடு நல்ல செய்தியை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர் செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சப்-கோர்ட் என்பது சம்பந்தப்பட்ட காவல் நிலையங்கள் அமைந்திருக்கின்ற பகுதியிலேதான் பெரும்பாலும் அமையவேண்டும். ஆனால் எங்களுடைய போடி காவல் நிலையங்களை மையமாக வைத்திருக்கக்கூடிய இடங்களில் அது போல அமையவில்லை. அதுபோல அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். தற்போது அந்த கோர்ட்டு உசிலம்பட்டியில் இயங்கி வருகிறது. எனவே அதை மீண்டும் போடிநாயக்கனூருக்கு மாற்றித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவரங்கள் தேவை என்றால் உடனடியாக ஒரு 'ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டியன்' போட்டால் ஒரு 4 நாட்களிலே தகவலைத் துறையிலிருந்து பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 10. திரு. ச. காந்திராஜன். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள்.

டீசல் தட்டுப்பாட்டினால் நிறுத்தப்பட்ட பேருந்துகள்.

10—

***279—திரு. ச. காந்திராஜன் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேடசந்தூர் தொகுதியில் டீசல் தட்டுப்பாடு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், வேடசந்தூர் - வெள்ளோடு, திண்டுக்கல்-வெல்லம்பட்டி(வழி)பூத்தாம்பட்டி, வேடசந்தூர்—அய்யனூர், வழித் தடங்களில் விரைவில் பேருந்துகள் விடப்படுமா ?